
# வசந்த இதழ்
# Vasanta Ethal

KRISHNAMURTI FOUNDATION INDIA FEBRUARY 2018 - MAY 2018 Rs.2/- VOL XIII ISSUE 1

நம் உடைமைகளாகவே நாம் இருக்கிறோம்...........3
உங்களை கவனத்துடன் நோக்குங்கள்............4
விலகிப்போதலோ, ஏற்றுக்கொள்ளலோ..........5
வாழ்வதென்பது தொடர்புடைமை...................4
மனித வாழ்வும் உறவுகளும்...............................5
தொலைதூரம் செல்ல...................................6

## சமயப்புரட்சி என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?




10 மற்றும் 11 பிப்ரவரி 2018 அன்று நடந்த மனித வாழ்வும், உறவுகளும் என்ற தலைப்பில், தமிழில் நடந்த இரண்டு நாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியின்போது தமிழாக்கம் செய்யப்பட்ட கிருஷ்ணமூர்த்தி உரைகளின் காணொளி திரையிடப் பட்டது. அக்காணொளியின் ஒரு காட்சி.

**கே**ள்வி: பொருளாதாரப் புரட்சியோ சமுதாய புரட்சியோ அல்ல... தேவைப்படுவது சமயப்புரட்சியே என்று நீங்கள் வலியுறுத்திக்கூறுவதாக செய்திகளில் படித்தேன். சமயப்புரட்சி என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

கிருஷ்ணமூர்த்தி: சமயம் என்று நாம் எதைக் கருதுகிறோம் என்பதை முதலில் பார்க்கலாம். சமயத்தின் இலக்கணங்கள் பற்றி இங்கு நாம் பேசவில்லை. யதார்த்தத்தில், சமயம் என்று நாம் எதைச் சொல்கிறோம். கோட்பாடுகள் மற்றும் சம்பிரதாயங்களின் தொகுதியாக நாம் சமயத்தைப் பார்க்கிறோம். உபநிடதங்கள், பகவத்கீதை அல்லது பைபிள் என்ன சொல்கிறது என்பதையும் சமயம் என்று நினைக்கிறோம். தெய்வீக அனுபவங்கள், பெற்ற தரிசனங்கள், அசைக்க முடியாத நம்பிக்கைகள் ஆகியவைகளால் நாம் சமயத்தை உருவாக்குகிறோம். ஹிந்து மதப் படியோ கிருத்துவ மதப்படியோ அல்லது கம்யூனிஸ வகைமுறைப் படியோ உருவாகியிருக்கும் நம் தளைப்பட்ட மனதிலிருந்து பிறக்கும் கருத்துகளும் சமயக்கருத்துகளாகி விடுகின்றன. குறிப்பிட்ட பழக்க வழக்கம், கட்டுப்பாடுகள் ஆகியவற்றோடு துவங்கும் நாம், அவற்றின் அடிப்படையில் அனுபவங்களைப் பெறுகிறோம். வழிபாடுகள், சடங்குகள், கோட்பாடுகள், கடவுளை தரிசிக்கவேண்டும் என்ற விருப்பம், மத ரீதியான அதீகாரங்களுக்கு அடிபணிதல், கணக்கிலடங்கா மூட நம்பிக்கைகள் ஆகியவற்றை சமயம் என்று நாம் கருதுகிறோம். ஆனால், இதுவா சமயம்? உண்மையை கண்டுபிடிக்க வேண்டுமென்று முயற்சி செய்பவன், முதலில் தான் கொண்டிருக்கும் முன்தீர்மானங்கள், கருத்துகள் ஆகியவற்றை கைவிட வேண்டும், இல்லையா? குரு சந்நிதானத்தின் அதிகாரத்தையும் உபநிடதங்களின் அதிகாரத்தையும் ஏற்காமல் ஒதுக்கித்தள்ள வேண்டும். தனக்கு ஏற்பட்ட அனுபவங்களும், தன்னை அதிகாரம் செலுத்த அனுமதிக்கக் கூடாது. அதிகாரங்கள் எதையும் ஏற்காதவரின் மனம், புதியனவற்றை கண்டுபிடிக்கும் ஆற்றல் கொண்டதாய் இருக்கும். இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் ஹிந்துவோ கிருத்துவரோ பௌத்தரோ அல்லது குறிப்பிட்ட தத்துவத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவரோ இல்லை என்பதே. அவ்வாறு ஒன்றைச் சார்ந்திருப்பதின் மடமையை காணும் நீங்கள், அதிலிருந்து பிரிந்து வெளியேறி விடுகிறீர்கள். உங்களால் இதைச் செய்ய முடியுமா? அவ்வாறு செய்தால், நீங்கள் இந்தச் சமுதாயத்தை எதிர்ப்பவர் என்றாகிறது. அதன் காரணமாக, நீங்கள், உங்கள் வேலையை இழக்க நேரிடலாம். இவ்வாறான விளைவுகளை எதிர்கொள்ள நேரலாம் என்ற பயத்தில்,

நீங்கள் அதிகாரத்தை தொடர்ந்து ஏற்றுக்கொள்கிறீர்கள்.

ஆக, நம்மால் சமயம் என்றழைக்கப்படுவது, உண்மையில் சமயமே இல்லை. நம்மை தளை படுத்தியிருக்கும் விஷயங்களைப் பொறுத்து, நாம் கடவுள் நம்பிக்கையுடன் இருக்கிறோம் அல்லது, கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறோம். நீங்கள் கடவுள் இருப்பதாக நம்புகிறீர்கள்... கம்யூனிஸ்ட் கடவுள் இல்லை என்று நம்புகிறார். இதிலென்ன வேறுபாடு? வேறுபாடு ஏதுமில்லை - நீங்கள் பெற்ற பயிற்சி, கடவுள் நம்பிகையை உருவாக்குகிறது. அவர் பெற்ற பயிற்சி, கடவுள் நம்பிக்கையை எதிர்க்கிறது, அவ்வளவே! எனவே, கருத்துகளால் மனம் தளைபடும் செயல்பாட்டு முறையை அறவே அகற்றவேண்டும். தீவிர விசாரணை செய்யும் ஒருவர், தளைபடாத மனதின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதால், தளைபடுத்தும் செயல்பாட்டு முறையை மறுத்து ஒதுக்குகிறார்.

நாம் நம்பிக்கையின்றி பயத்துடன் வாழ்கிறோம். உள் முகத்தில் நிறைவின்றி தெளிவின்றி வாழ்கிறோம். இந்நிலையில் நம்மை ஒரு நாட்டுடனோ, சித்தாந்தத்தி னுடனோ அல்லது கடவுள் நம்பிக்கை யுடனோ அடையாளப்படுத்திக் கொள்வதால் சிறிதளவு ஆறுதல் பெறுகிறோம். உலகிலுள்ள அனைத்து மதங்களும் போதிப்பதென்னவோ அன்பையும் சகோதரத்துவத்தையும் தான். ஆனால், உண்மையில் மனிதர்களுக்கிடையே வேற்றுமையை உண்டாக்கி பிரிவினையை ஏற்படுத்து பவைகளாக மதங்கள் உள்ளன. நீங்கள் ஒரு சீக்கியர் - நான் ஒரு ஹிந்து - அவர் முஸ்லீம் - இன்னொருவர் பௌத்தர் என்றெல்லாம் குழப்பம் வந்தது மதங்களால் தான்.

இந்தக் குழப்பங்களையும் பிரிவினைகளையும் காணும் ஒருவர், தற்போது நிலவும் சிந்தனை முறையி லிருந்து மாறுபட்ட வித்தியாசமான தொரு சிந்தனை முறை இருக்கக் கூடும் என்று உணர்கிறார். ஆனால், ஹிந்துவாகவோ கிருத்துவராகவோ அல்லது வேறொரு அடையாளத் தோடோ ஒருவர் நீடித்திருக்கும்வரை, மாறுபட்ட சிந்தனை தோன்றுவதற்கு வாய்ப்பே இல்லை என்பது வெளிப்படை.

உங்களின் அடையாள சின்னங்கள் அகல, உங்கள் இருப்பின் மொத்த கட்டமைப்பை, உங்களை, நீங்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். ஏன் அதிகாரங்களை பணிந்து ஏற்றுக்கொண்டு அவற்றை பின்பற்றி நடக்கிறீர்கள் என்பதை நீங்கள் கண்டறிய வேண்டும். அதன் காரணம் வெட்ட வெளிச்சமாகவே தெரிகிறதே - உங்களுக்குத் தேவை, வெற்றி. வெற்றியை நோக்கிப் பயணிக்கும் நீங்கள், சோதனைகள் தோன்றும் காலங்களில் துவண்டு போகாம லிருக்க, 'கடவுள் இருக்கிறார், அவர் காப்பாற்றுவார்' என்ற நம்பிக்கையை கொண்டிருக்க பெருதும் விரும்பு கிறீர்கள். உண்மையில் மிகுந்த களிப்புடன் மகிழ்ச்சியுடன் இருப்பவர், கடவுளைப் பற்றி நினைப்பதே இல்லை. நமக்கு சோதனைகள், துயரங்கள், போராட்டங்கள் வரும் போது, நாம் கடவுளை நினைக்கிறோம். ஆனால், நாம்தான், நம் செயல்பாடுகளால் போராட்டங் களை உருவாக்கியவர்கள். நம் செயல்பாட்டின் வழிமுறைகளைப் பற்றி புரிந்துகொள்ளாமல், வெறுமனே கடவுளைத் தேடி ஓடுவது, மாயத் தோற்றங்களுக்கு இட்டுச் செல்கிறது.

நான் இங்கு பேசும் சமயப்புரட்சி என்பது எந்தவொரு குறிப்பிட்ட சமயத்திற்கும் புத்துயிரூட்டுவ தாகவோ சீர்த்திருத்தம் செய்வ தாகவோ இல்லை. மாறாக, அனைத்து சமயங்களிலிருந்தும் சித்தாந்தங்களி லிருந்தும் முற்றிலுமாக விடுதலைப் பெறுவதையே சமயப் புரட்சியாகக் கருதுகிறேன். அதாவது, சமயங் களையும் சித்தாந்தங்களையும் உரு வாக்கிய இந்தச் சமுதாயத்திலிருந்து விடுதலை பெறுவதே புரட்சியாகும்.

பேரவா கொண்டிருப்பவர் நிச்சயமாக சமயப்பற்று கொண்டவ ராக இருக்க முடியாது. பேரவா கொண்டிருப்பவர் அன்பைப் பற்றி பேசலாம். ஆனால், அவருக்கு அன்பைப் பற்றி எதுவும் தெரியாது. உலகாயத பொருட்களை அடைந்து விட பேரவா கொள்ளாதவராக ஒருவர் இருக்கலாம். ஆனால், அவரே 'ஞானியாகி விடவேண்டும், ஆன்மீக உலகில் புகழ் பெறவேண்டும். சொர்க்கத்தில், பலனை அடைந்து விடவேண்டும்' என்றெல்லாம் விரும்பினால், அவரும் பேரவா கொண்டிருப்பவரே. சடங்குகள், நம்பிக்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றிலிருந்து மட்டுமல்லாமல், பொறாமையிலிருந்தும் மனம்

## அறிவீனமான பாசாங்குத்தனம்

தியானம் என்பது அன்றாட வாழ்விலிருந்து அந்நியமான ஏதோ ஒன்று அல்ல. நீங்கள், பேராசையான திட்டங்களோடு, இரக்கமற்றவராக, இழிவாக, பண்பற்றவராக, மென்மையுணர்வு அற்றவராக, ஒன்றை அடைய வேண்டியவராக இருந்துகொண்டு அதே சமயத்தில் கடவுள், சத்தியம், அன்பு, தியானம் என்பவற்றைப் பற்றி பேசுகிறீர்கள். அது ஓர் அறிவீனமான பாசாங்குத்தனம் அல்லாது வேறு என்ன?

London 7th May 1966, Talk - 4

## புத்தகம் படிப்பது எளிதாக இருக்கிறது

நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள், எப்படி நடந்துகொள்கிறீர்கள், நீங்கள் ஏன் கோபப்படுகிறீர்கள், பொறாமைகொள்கிறீர்கள், ஏன் மன அழுத்தம்கொள்கிறீர்கள் - உங்களை நீங்களே நோக்கினால், 'நீங்கள் யார்' என்பதை சொல்லும் புத்தகத்தைவிட அதிகமாக உங்களைப்பற்றி நீங்கள் கற்றுக்கொள்ள முடியும்.

ஆனால், உங்களை நீங்களே பார்த்து தெரிந்துகொள்வதைவிட புத்தகம் படிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கிறது.

Letters to the School, Vol. - 2
Letter-18, 15th November 1983

விடுதலை பெற்றிருத்தல் வேண்டும். முழுமையான விடுதலையை மனிதனுக்குப் பெற்றுத்தருவதே சமயப்புரட்சி. சமயப்புரட்சி, தோன்றினால் மட்டுமே, முற்றிலும் வேறுபட்ட முறையில் வாழ்க்கையை எதிர் கொள்ள மனிதனால் முடியும். மேலும், அடுக்கடுக்காக பிரச்சினைகளை உருவாக்கும் மனிதனின் செயல் பாட்டு முறையும் முடிவிற்கு வரும்.

வாழ்க்கையின் இலட்சியம் என்று எனக்கு எதுவும் இல்லாவிட்டால் என்ன நடக்கும்? சமுதாயம் என்னை அழித்துவிடும்' என்று சொல்லிக் கொண்டே நீங்கள் இந்த உரையை வெறும் வார்த்தைகளாகவோ அல்லது அறிவுப்பூர்வமாகவோ மட்டுமே கேட்டிருக்கலாம். பேரவா கொண்டிருக்காவிட்டால், உலகம் உங்களை அழித்துவிடுமா என்ன என்று நான் வியக்கிறேன். சமுதாயத்தை புரிந்துகொண்ட அக்கணமே, நீங்கள் அதை ஒதுக்கித் தள்ளுகிறீர்கள். பேரவா, பொறாமை, வெற்றியை நோக்கிய பயணம், சமயக்கோட்பாடுகள், நம்பிக்கைகள், கண்மூடித்தனமான மூட நம்பிக்கைகள் ஆகியவற்றை அடித்தளமாக கொண்டிருக்கும் சமுதாயத்தின் கட்டமைப்பை முழுமையாகக் காணும் நீங்கள் அதை ஏற்க மறுக்குகிறீர்கள். சமுதாயத்தை விட்டுவிலகி நிற்கும் உங்களால் இப்போது பிரச்சினைகளை புதியதாகப் பார்க்க முடியும்... ஒரு வேளை, பிரச்சினைகளே இல்லாமல் போனாலும் போகலாம். இந்த உரையை நீங்கள் சொல்லளவில் மட்டுமே கேட்டிருக்கக் கூடும் என்பதினால் நீங்கள் பழைய பாணியிலேயே நாளையும் தொடர்வீர்கள். பகவத் கீதையையோ பைபிளையோ படிப்பீர்கள், உங்கள் குருவை அல்லது பூசாரியை நாடிச் செல்வீர்கள், இத்யாதிகள் நடக்கும். கூறப்பட்டவைகளை சொல்லளவில் அறிவுப்பூர்வமாக மட்டும் நீங்கள் ஏற்றுக் கொண்டிருப்பின், உரையை கேட்டதின் காரணமாக கூடுதலாக மற்றுமொரு பிரச்சினை வந்து சேர்ந்திருக்கும். ஆகவே, ஏற்கனவே தேவைக்கதிகமான போராட்டங்களையும் பிரச்சினைகளையும் கொண்டிருக்கும் நீங்கள், இதைக் கேட்காமல் இருப்பதே நல்லது. உங்கள் நிஜ வாழ்க்கையுடன் எந்தவொரு தொடர்பும் இவ்வுரைக்கு இல்லையென்றால், நீங்கள் காதைப் பொத்திக்கொண்டு இதை கேளாமல் இருப்பதே நன்று. ஏனென்றால், சத்தியமான ஒன்றை கேட்டுவிட்டு, அதன்படி வாழாமல் இருந்தால், பயங்கரமான குழப்பமாகவும் துக்ககரமான சீர்குலைவாகவும் இருக்கும் தற்போதைய நிலையில் உங்கள் வாழ்க்கை, மேலும் தொடரும்.

புதுதில்லி, 10.10.1956

## நம் உடைமைகளாகவே நாம் இருக்கிறோம்

**ந**ம் உடைமைகளாகவே நாம் இருக்கிறோம். பணத்தை வைத்திருப்பவர், பணத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு, பணமாகவே இருக்கிறார். தன் சொந்த வீடு, மேசை, நாற்காலி, நிலபுலன்களோடு தன்னை அடையாளப் படுத்திக்கொள்பவர், அவைகளாகவே இருக்கிறார். இது போன்றே, கோட்பாடுகளுடனும், சக மனிதர்களுடனும் தன்னை இணைத்துக் கொள்ளும்போது, சொந்தமாக்கிக் கொள்ளும்போது, அங்கு உண்மையில் தொடர்பு ஏதும் இருப்பதில்லை. நமக்கு உடைமைகள் என்று, சொந்தம் என்று, எதையும் கொண்டிராவிட்டால், நாம் வெறுமையாக உணர்வதால், நம்மில் பலரும் உடைமைகளைச் சொந்தமாக்கிக் கொள்கிறோம்.

நமது வாழ்க்கையை மேசை, நாற்காலிகளாலும், சங்கீதத்தாலும், விஷயஞானத்தாலும் மற்றும் பல வற்றாலும் நிரப்பிக்கொள்ளாவிட்டால், நம்மை வெற்று ஓடாய் (shell) உணர்கிறோம். உடைமைகளால் நிரம்பியிருக்கும் ஓடு, இப்போது பெருத்த இரைச்சலை எழுப்புகிறது – இதையே நாம் 'வாழ்க்கை' என்கிறோம்; இத்தகைய வாழ்க்கை, நமக்கு திருப்தி அளிக்கிறது. இந்த இரைச்சலில் தடங்கல் ஏதும் ஏற்பட்டுவிட்டால், சத்தம் தடைப்பட்டு விட்டால், உடனே துக்கப்படுகிறோம். இரைச்சல் தடைப்பட்ட நிலையில், திடீரென நீங்கள் யார் என்பதனை நீங்களே கண்டுபிடித்து விடுகிறீர்கள் – அர்த்தமேதுமில்லாத வெற்று, காலி ஓடு நீங்கள் என்பதனைக் கண்டுகொள்கிறீர்கள்.

The Collected Works Vol.V p.297

# வாழ்வதென்பது தொடர்புடைமை

சமுதாயத்திலிருந்து விலகிச்சென்று ஒதுங்கி வாழ்வதாலோ, சந்தடியற்ற இடத்தில் ஏகாந்தமாய் தனிமையில் இருப்பதாலோ, ஒருவருக்கு தன்னைப் பற்றிய புரிதல் வருவதில்லை. மிகுந்த கவனத்துடன் அறிவார்ந்த முறையில் இவ்விஷயத்தை நீங்களும் நானும் ஆழ்ந்து நோக்கும்போது, மற்றவைக ளுடனான நம் தொடர்பில்தான் நம்மை நாம் புரிந்துகொள்ள முடியுமே தவிர, தொடர்பை அறுத்துக்கொண்டு தனியாக வாழ்வதால் தன்னையறிதல் நிகழாது என்பதைக் காண்கிறோம்.

ஒரு தொடர்பும் இல்லாமல் தனியாக வாழ்வது என்பது இயலாத காரியம். யாராலும் தொடர்பின்றி இருக்க முடியாது. வாழ்வதென்பது தொடர்புடைமை. தொடர்புடைமை என்ற நிலைக்கண்ணாடியில் என்னை நான் புரிந்து கொள்கிறேன். இவ்வாறு சொல்வதின் பொருள் என்ன வென்றால், தொடர்பு கொண்டிருக்கும் நான், தொடர்பு சார்ந்த என் எண்ணங்கள், உணர்ச்சிகள், மற்றும் செயல்களை மிகவும் கவனத்துடன், விழிப்புடன் நோக்க வேண்டும் என்பதாகும். இவ்வாறு செயல்படுவது ஒன்றும் கடினமான காரியமோ அல்லது அதிதீர முயற்சியோ இல்லை. நதியின் ஊற்றுக்கண் கண்களுக்குப் புலப்படுவதில்லை. அதிலிருந்து நதிநீர் வெளியே வேகத்துடன் புறப்படுவதுமில்லை. ஆனால், நதிநீர் நிலத்தில் பாய்ந்தோடி ஓட ஓட, அதன் ஆழம் மேலும் மேலும் கூடக்கூட, நதிநீரின் வேகம் அதிகரிக்கிறது. அது போன்றே, நம் உறவின்பாற்பட்ட எண்ணங்கள், உணர்ச்சிகள் மற்றும் செயல்களை விழிப்புடன் நோக்கும் செய்முறையானது, அதனை கவனத்துடனும், பொறுமையுடனும், கண்டனம் செய்யாமலும் எண்ணங் களை மேலும் மேலும் விசாரணை செய்யும்போது, அதன் உத்வேகம் அதிகரிக்கிறது, தன்னையறிதல் நிகழ்கிறது. இதில் காலத்தின் பங்களிப்பு என்று ஏதும் இல்லை.

The Collected Works Vol.VI p.37-38

# உங்களை கவனத்துடன் நோக்குங்கள்

உங்கள் நடத்தை, உங்கள் சொல், அன்றாட தொடர்புகளில் உங்களின் செயல்பாட்டுமுறை போன்றவற்றை கவனமாக நீங்கள் நோக்குவதால், பெறுவதாக இருப்பது தன்னறிவு, அவ்வளவே. இந்த வகையில் தொடங்குங்கள். விழிப்புடன் கவனமாக நோக்குவது எத்தனை கடினமான காரியம் என்பதை விரைவிலேயே நீங்கள் உணர்வீர்கள். நீங்கள் நடந்து கொள்ளும் விதத்தை, உங்கள் வேலைக்காரரிடம் பேசும் போது நீங்கள் உபயோகிக்கும் சொற்களை, பேசும் விதத்தை, அதுவே உங்கள் மேலதிகாரியிடம் நீங்கள் பேசும் விதத்தை கவனமாகப் பாருங்கள். சகமனிதர்கள், கருத்துகள் மற்றும் பொருட்கள் பற்றி உங்கள் மனோபாவம் குறித்தும் விழிப்புடன் கவனியுங்கள். உறவு என்ற கண்ணாடி யில், உங்கள் எண்ணங்கள் மற்றும் உங்கள் உள்நோக்கங்கள் ஆகிய வற்றையும் உன்னிப்பாகப் பாருங்கள். அவ்வாறு பார்க்கும் அக்கணத்தி லேயே, எண்ணங்களை, உள்நோக்கங் களை சரிசெய்துவிட வேண்டும் என்று விரும்புகிறீர்கள். ‘இது நல்லது, அது கெட்டது – நான் இதைத்தான் செய்ய வேண்டும், அதைச் செய்யக்கூடாது’ என்று சொல்கிறீர்கள். உறவு என்ற கண்ணாடியில் உங்களைப் பார்க்கும் போது, உங்கள் அணுகுமுறையானது, ஒன்று, கண்டனம் செய்வதாய் இருக்கிறது - இல்லையென்றால், நியாயப்படுத்துவதாய் உள்ளது.

இவ்வகை அணுகு முறையால், கண்ணாடியில் பார்ப்பதை, நீங்கள் திரித்து மாற்றம் செய்துவிடுகிறீர்கள். அதுவே, சக மனிதர்கள், கருத்துகள் மற்றும் பொருட்கள் பற்றிய உங்கள் மனோபாவத்தை, தொடர்பு என்ற நிலைக்கண்ணாடியில் யதார்த்தமாக பார்க்கும்போது, அதில் தெரியும் பிரதிபிம்பத்தை கண்டனமோ, ஆமோதித்தலோ செய்யாமல், அதைப் பற்றிய தீர்மானம் ஏதும் செய்யாமல், உண்மையைப் பார்க்கும்போது, கண்டுணரும்போது, அக்கண்டுணர் தல், தனக்கே உரிய செயல்பாட்டினை கொண்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள். அதுவே தன்னறிவு பெறுவதற்கான ஆரம்பப்படியாகும்.

The Collected Works Vol.VI p.307

# நிலைக்கண்ணாடியாம் தொடர்புடைமை

நம்மை உள்ளபடி காண்பிக்கும் நிலைக்கண்ணாடியாக, நாம் பிறருடன் கொண்டிருக்கும் உறவு இருக்கிறது. வாழ்வு முழுவதும், உறவின் இயக்கமாகவே உள்ளது. இப்புவியில் வாழும் உயிரினம் எதுவும் பிறவற்றுடன் எந்த உறவும் கொண்டிராமல் இருக்கவில்லை. உலகையே துறந்துவிட்டு, தனிமையில் வாழும் துறவிகூட, தன் கடந்த கால நினைவுகளுடனும், தன்னை சுற்றியிருப்பவர்களுடனும் தொடர்புடன் இருக்கிறார். உறவு கொண்டிருப்பதிலிருந்து யாரும் தப்பிக்கவே முடியாது.

நிலைகண்ணாடியாய் செயல்படும் உறவின் மூலமாக, நாம் வெளிப்படுத்தும் எதிர்வினைகளையும், விருப்பு வெறுப்புகளையும், அச்சம், மனச்சோர்வு, கலக்கம், தனிமை, துக்கம், வலி மற்றும் துயரம் போன்ற உணர்வுகளையும் நம்மால் பார்க்க முடியும். மேலும், நாம் அன்புடையவரா, இல்லை, அன்பு என்ற ஒன்று, துளிகூட இல்லாதவரா என்பதையும் பார்க்க முடியும்.

Mind Without Measure p.79

# மனித வாழ்வும் உறவுகளும் – இரண்டு நாள் தமிழ் நிகழ்ச்சி

மனித வாழ்வும் உறவுகளும் என்ற தலைப்பில் இரண்டு நாள் தமிழ் நிகழ்ச்சி 2018 பிப்ரவரி 10 மற்றும் 11 தேதிகளில், கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷனின் தலைமையகமான வசந்த விஹாரில் இனிதே நடைபெற்றது. தமிழில் இரண்டாவது வருடமாக நடந்த இந்நிகழ்ச்சியில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுமார் 100 நபர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டு நாள் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில், ஜே கிருஷ்ணமூர்த்தியின் தமிழாக்கத்துடன் கூடிய காணொளி காட்சிகள் திரையிடப்பட்டன.

திரு S.P. கந்தசுவாமி, செயலர், கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷன் இந்தியா, அவர்கள் துவக்கவுரையாற்றி ஜே கிருஷ்ணமூர்த்தியின் போதனைகளின் சாராம்சத்தை எடுத்துரைத்தார்.

Dr. V.S. ஸ்ரீதர் (Paediatrician, Working with tribals in B.R. Hills, Near Mysore) மற்றும் Dr. கஜானன் ராவ், (அறங்காவலர், கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷன்), அவர்களின் சொற்பொழிவுகளும், கேள்வி பதில் நேரங்களும் இடம்பெற்றன.

மேலும், பங்கேற்பாளர்கள் ஆறு குழுக்களாக பிரிக்கப்பட்டு கலந்துரையாடினர். ஜே. கிருஷ்ணமூர்த்தி போதனைகளின் கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதி பகுதியாக, ஜே கிருஷ்ணமூர்த்தியின் போதனைகளை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியைப் பற்றி திரு. G. ரமேஷ் (பத்திரிகை துணை ஆசிரியர்) அவர்கள் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில், தங்கள் உறவுகளிலுள்ள பிரச்சினைகளுக்கான காரணங்களை ஜே கிருஷ்ணமூர்த்தி போதனைகள் மூலம் தமிழ் மொழி வாயிலாக அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்ததாக பங்கேற்பாளர்கள் தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொண்டனர். இது போன்ற தமிழ் நிகழ்ச்சி இனி வருங்காலங்களிலும் தொடர வேண்டும் என்றும் பயன்பெற்றவர்கள் பலர் கருத்துக்களை தெரிவித்தனர். சென்ற ஆண்டு, முதல் முறையாக இந்நிகழ்ச்சி ‘வாழ்க்கைப் பிரச்சினைகளும் ஜே கிருஷ்ணமூர்த்தியின் போதனைகளும் என்ற தலைப்பில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



தமிழில் நடந்த இரண்டு நாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக கடந்துரையாடல்கள் இருந்தன. அதனின் ஒரு காட்சி படத்தில் காணலாம். இதே போன்று ஆறு குழுக்களாக வசந்த விஹாரில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியின் ஒலிப்பதிவுகளை you tube வலைதளத்தில் J Krishnamurti, Tamil gathering 2018 என்று பதிவேற்றம் செய்யப்படவுள்ளது. மேலும் www.kfionline.org என்ற இணையதளத்தில் இதன் link-ஐ பெறலாம்.

குறிப்பு: ஜே கிருஷ்ணமூர்த்தி போதனைகளைப் படிப்பதற்கும், ஆராய்வதற்கும் ஆர்வமுள்ள நபர்கள் வசந்த விஹாரில் தங்கி நூலகத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். இது போன்ற நிகழ்ச்சியின் போதுதான் வசந்த விஹாரில் தங்கி பயன்பெற முடியும் என்பதில்லை. ஜே கிருஷ்ணமூர்த்தியின் போதனைகளை புரிந்துகொள்ளும் ஆர்வம் உள்ளவர்கள், எப்போது வேண்டுமானாலும் மின்னஞ்சல் அல்லது கடிதம் மூலமாக முன்னதாக அனுமதி பெற்று வசந்த விஹாரில் தங்கி பயன்பெறலாம்.

# விலகிப்போதலோ, ஏற்றுக்கொள்ளலோ உதவுவதில்லை

தன்னை ஆழமாகப் புரிந்துகொள்ள, ஒருவருக்கு சமச்சீரான மனோநிலை தேவைப்படுகிறது. தன்னை புரிந்துகொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையில், ஒருவர், உலக வாழ்வைவிட்டு விலகிப்போகவும் கூடாது, அல்லது, தன்னைப் பற்றி எண்ணிப்பார்க்கவே நேரம் இல்லாமல் உலக விஷயங்களில் சிக்கிக் கொள்ளவும் கூடாது. தன்னை அறிந்துகொள்ள, விலகிப் போதலோ, ஏற்றுக்கொள்ளலோ உதவுவதில்லை - சமநிலை தேவைப்படுகிறது.

The Collected Works
Vol.III p.22

# தொலைதூரம் செல்ல, வெகு அருகாமையிலிருந்து தொடங்க வேண்டும்

**தொ**லைதூரம் செல்ல, அவசியம் நீங்கள் வெகு அருகாமையிலிருந்து தொடங்க வேண்டும். ஆனால், அருகாமையிலிருந்து துவங்குவது பலருக்கும் மிகுந்த சிரமமான காரியமாய் உள்ளது. ஏனென்றால், 'உள்ளதாய்' இருக்கும் நம் இயல்பை, உண்மையில் நாம் யார் என்ற உண்மையை எதிர்கொள்ள முடியாமல், உள்ளதிலிருந்து தப்பிக்க வேண்டியிருப்பதால், நம்மிலிருந்து தொடங்குவது நமக்குச் சிரமமானதாய் உள்ளது. நம்மை முதலில் அறிந்து கொள்ளாமல், நம்மால் ஆழமான விசாரணை மேற்கொண்டு, தொலைதூரம் செல்ல முடியாது. தொடர்பு ஏதுமின்றி, வாழ்க்கையே இல்லை. நாம் தொடர்பில் தொடர்ச்சியாக இருக்கிறோம். ஆக, தொடர்புடைமை என்பது அருகிலிருப்பது. இதனை தாண்டி அப்பால் செல்ல வேண்டுமென்றால், முதலில் தொடர்புடைமையை பற்றிய புரிதல் வேண்டும். அருகிலிருக்கும் தொடர்புடைமையை கவனமாகப் பார்த்து, புரிந்து கொள்வதைக்காட்டிலும், மிகத்தொலைவில் இருப்பதைப்பற்றி தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுகிறோம். நம் தொடர்புகளைப் பற்றிய புரிதலோடு, அதில் தீவிர அடிப்படை மாற்றம் செய்வதை விட்டுவிட்டு, கடவுள்/சத்தியம் போன்ற விஷயங்களில் பெரிதும் ஆர்வம் காட்டுகிறோம். இவ்வாறு உள்ளதிலிருந்து தப்பித்து, கடவுள்/சத்தியம் என்று ஓடுவது, போலித்தனமானது, பொய்யானது. தொடர்பு மட்டுமே நம்மிடம் உள்ளது. தொடர்புடைமையை புரிந்து கொள்ளாமல், கடவுள் என்றால் என்ன, மெய்ம்மை என்றால் என்ன என்பதையெல்லாம் நம்மால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது. ஆக, சமுதாய கட்டமைப்பில், சமூகத்தில் பரிபூரண மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால், தனிமனிதன் தன் தொடர்பினை பரிசுத்தமாக்கிக் கொள்ள வேண்டும். தொடர்பினை பரிசுத்தமாக்குதல் என்பது தன்னில் அடிப்படை மாற்றத்தை மலரச் செய்வதற்கான துவக்கப் படி.

The Collected Works Vol. VI pp 137

---

நாம் இதைப்பற்றி பெருமளவில் பேசுகிறோம் – கடவுளின் மீது அன்பு, மனித வர்க்கத்தின் மீது, நாட்டின் மீது அன்பு, குடும்பத்தின் மீது அன்பு – அப்படியானாலும் ஏனோ, அந்த 'அன்பின்' உடன் வெறுப்பும் வலம் வருகிறது. நீங்கள் உங்கள் கடவுளின் மீது அன்பு கொள்கிறீர், மற்றவருடைய கடவுளை வெறுக்கிறீர்; உங்கள் குடும்பத்தின் மீதும், நாட்டின் மீதும் அன்பு கொள்கிறீர், மற்ற குடும்பத்தின் மீது எதிராக, மற்ற நாட்டின் மீது எதிராக இருக்கிறீர்கள்.

–Beyond Violence, Chapter-3

---

**Statement about ownership and other particulars of Vasantha Ethal**

**FORM IV**

| | | |
|---|---|---|
| 1. Place of publication | : | Krishnamurti Foundation India<br>Vasanta Vihar<br>124, 126 Greenways Road<br>Chennai – 600 028 |
| 2. Periodicity of publication | : | Once in four months (February, June, and October) |
| 3. Printer's name | : | N. Subramanian |
| Whether citizen of India | : | Yes |
| Address | | Sudarsan Graphics<br>Offset Press<br>27 Neelakanda<br>Mehta Street<br>T.Nagar<br>Chennai - 600 017 |
| 4. Publisher's name | : | Dr. V. Aravind |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Anugraha<br>Flat No. 2,<br>Old No 26, New No 51<br>Fourth Trust Cross Street<br>Mandavelli<br>Chennai – 600 028. |
| 5. Editor's Name | : | K. Krishnamurthy |
| Address | : | Krishnamurti<br>Foundation India<br>Vasanta Vihar<br>124, 126 Greenways Road<br>Chennai - 600 028 |
| 6. Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | : | Krishnamurti<br>Foundation India<br>Vasanta Vihar<br>124, 126 Greenways Road<br>Chennai – 600 028 |

I, Dr. V. Aravind, hereby declare that the particulars given are true to the best of my knowledge and belief.

(V.Aravind)

*Published in February, June & October.*
*Registered with The Registrar of Newspapers for India under No. TNTAM/2006/17823*

Periodical

*If undelivered please return to:*
KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124,126 Greenways Road
Chennai - 600 028. Tel: 24937803/24937596
E-mail: publications@kfionline.org
Websites: www.kfionline.org / www.jkrishnamurti.org

*Published by Dr. V. Aravind on behalf of the Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 (Old 64, 65) Greenways Road, Chennai - 600 028.*
*Printed by N. Subramanian at Sudarsan Graphics Offset Press, 27 Neelakanta Mehta Street, T. Nagar, Chennai – 600 017. Editor: K. Krishnamurthy*